**வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி - 2018**

**-----------------------------------------**

**நிதிக் கூற்றுக்கள்**

**----------------------**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**----------------------------------------**

வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**-------------------------------------------------------------**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

**---------------------------------------------------------------------------------------------------------------**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் பேணிச்செல்கின்ற புகையிரத உணவகத்திற்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்கான வாடகையாக காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 40,412,912 ஆன தொகை 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் இலாபம் மேற்கூறப்பட்ட தொகையினால் கூடுதலாகவும் அவ் வர்த்தக மற்றும் ஏனைய கடன் நிலுவைகள் அப் பெறுமானத்தினால் குறைவாகவும் நிதிகூற்றுக்களில் காணப்பட்டது | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வாடகை பணம் தொடர்பாக கம்பனியின் கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் 20 வருட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த 2 ஹேக்கர் அளவிலான காணி துண்டொன்று அபிவிருத்தி செய்வதற்காக இரண்டு வெளி | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி உருவாக்கப்பட்ட் ஒப்பந்த கோட்பாடுகளின் தன்மை மற்றும் குத்தகை காணிகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களுடன் ஒப்பந்தமொன்றில் உடன்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் கண்டறியப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (இ) | வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல் அமைந்துள்ள 23 ஹேக்கர் 01 ரூட் 9.05 பர்ச்சஸிலான காணி 99 வருட குத்தகை அடிப்படையில் கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 4,306,000,000 என அரசின் தலைமை மதிப்பீட்டாளரினால் 2016 மே 25 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தொடர்புடைய குத்தகை ஒப்பந்த்திற்கு உடன்பட்டிருந்தது 2019 யூன் 17 ஆம் திகதி ஆவதுடன் இதன் சொத்து கையகப்படுத்தல் மற்றும் பொறுப்புக்களை தீர்த்தலுடன் தொடர்புடைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் கண்டறியப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் கைச்சாத்திடல் மற்றும் சொத்து கையகப்படுத்தல் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததினால் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் பொருண்மைதன்மை கருத்திற் கொள்ளப்பட்டு தொடர்புடைய விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி ஏசியா பசிபிக் கோலப் கோட் நிறுவனத்தினால் 2009 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த அலுவலக உபகரணங்கள், சமயலறை உபகரணங்கள் உள்ளடங்கலாக ரூபா 262,284,393 பெறுமதியான நிலையான மற்றும் நடைமுறை சொத்துக்கள் இருப்பிற்கு உட்சேர்ப்பதற்கு மற்றும் அச் சொத்து மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிக்கப்பட்டிருந்த அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்து பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு மற்றும் அச் சொத்துக்களின் நிகழ்கால நிலை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இற்கு காணப்பட்ட கம்பனியின் கடன் பட்டோர் மீதி ரூபா 62,690,296 ஆவதுடன் அதில் ஐயக் | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | போதுமான ஐயக் கடன் ஒதுக்கல் மற்றும் ஐயக் கடன் கொள்கை |

| | | | |
|---|---|---|---|
| | கடனாக ரூபா 23,716,672, அதாவது 39 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் இவ்வாறான உயர் பெறுமதியில் அடமான கடனாக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை. | | கண்டறியப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த சேவையொன்றிற்காக அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 1,561,148 ஆன தொகை உட்பட ரூபா 7,541,733 அறவிட முடியா கடனாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது 2019 மார்ச் 14 ஆம் திகதியிலாகும். காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு முறையான ஒப்பந்தத்தில் அல்லது முற்பணம் அறவிடலொன்று இன்றி சேவை வழங்கல் இதற்கான காரணமாகி காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிலும் மேலும் ரூபா 5,159,986 ஆன சேவை அக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பணத்தில் ரூபா 3,664,986, 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கம்பனியிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | வாடிக்கையாளர்களின் கடன் எல்லைகளுக்குள் முறையான ஒப்பந்தங்களுக்கு உட்பட்டதாக மட்டும் வேை வழங்கப்படல் வேண்டும். அறவிட முடியா கடன் பதிவழிப்பதற்கு முன்னர் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | முறையான ஒப்பந்தத்திற்கு உடன்படாது வாய்மூல ஒப்புதலின் அடிப்படையில் லயன் பூரி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 3,440,904 பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி மற்றும் காரணங்கள் கூறப்படாது அறவிட முடியா கடனாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் அதில் ரூபா 2,000,000 இற்காக ஐயக் கடனாக ஒதுக்கிச் செலுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தமொன்றிற்கு உடன்படாது சேவை வழங்கல் தொடர்பாக மற்றும் சேவையின் பெறுமதி விரைவாக அறவிடப்படுவதற்கு செயற்படாமை தொடர்பாக முறையாக பரீட்சித்து பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இல PED 12 மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பொது வியாபாரச் சுற்றறிக்கை | | | |
| **(i) 5.2.2** ஆம் உறுப்புரை | கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த வரவு செலவு ஆவணத்தில் மூலதன செயற்திட்டத்திற்காக தேவையான மூலதக செலவு ஒதுக்கப்படாமல் அவ்வப்போது பணிப்பாளர் சபை பத்திரிகை முன்வைக்கப்பட்டு வெவ்வேறு மூலதன செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படாது செயற்படுத்தப்பட்டிருந்த சில செயற்திட்டங்களின் பெறுமதி மாத்திரம் ரூபா 256,628,173 ஆக காணப்பட்டது. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | பொது வியாபாரச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரவு செலவிற்கான திட்டத்திற்கு அமைவாக மூலதனச் செலவு ஏற்க்கப்படல் வேண்டும். |
| **(ii) 4.1** ஆம் உறுப்புரை | வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நிறுவனத்தின் கடன் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் கடனிற்கு விற்பனை தொடர்பான கொள்கையொன்று தயாரித்து அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் கடன் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கக் கூடிய | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | பொது வியாபார சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எல்லை, கடன் அறவிடல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் நிச்சமற்றதன் காரணத்தினால் முறையற்றதாக கடன் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்வதற்கு வசதி அளிக்கப்பட்டிருந்தது. கடன் அறவிடப்படுவதற்கு பெரிதாக தாமதங்கள் ஏற்பட்டிருத்தல் மற்றும் அறவிட முடியா கடனாக அசாதாரண பெறுமதி பதிவழிக்கப்பட்டிருத்தல் போன்ற பாதகமான நிலைமைகள் இவ்வாறான கொள்கையொன்று இல்லாமையினால் விசேடமாக ஏற்பட்டிருந்தது. | |

## 1.8 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இற்கு கம்பனியின் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் ரூபா 109 மில்லியன் வங்கி மேலதிகப்பற்று காணப்படினும், வழங்குனர்களுக்கு வெளியிட்ட காசோலைகள் வழங்குனர்களுக்கு கையளிக்கப்படாமல் கால தாமதத்தின் பின்னர் காசோலை கையளிக்கப்பட்டதனால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வங்கி மேலதிகப்பற்று மீதி மற்றும் உண்மை வங்கிமேலதிக பற்றிற்கு இடையில் பாரிய வித்தியாசம் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிறுவனத்தின் வருட முடிவில் காசு மீதி மற்றும் கடனீந்தோர் மீதி நிதிக் கூற்றுக்களில் குறைவாக காட்டப்படுவதற்கு முயற்சியெடுக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் ஊடாக உண்மை நிலை வெளிக்காட்டப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 169.23 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் இலாபம் ரூபா 218.13 மில்லியன் ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நேரொத்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 48.90 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிறுவன நிர்வாக செலவு ரூபா 41.15 மில்லியன் இனால் அதிகரித்தமை மற்றும் நிகர நிதி வருமானம் ரூபா 17.58 மில்லியன் இனால் குறைந்தமை இந் நிதி விளைவு வீழ்ச்சியடைவதற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **Flora Park Island** இற்காக ஓக்கீட் கன்றுகள் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு வீட்டுத்தோட்ட முகாமையாளர் தாய்லாந்திற்கு சென்று ரூபா 8.55 மில்லியன் ஆன 16,000 ஓக்கீட் கன்றுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தார். ஆதற்கு மேலதிகமாக தேசிய ரீதியாக 3,900 ஓக்கீட் கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.24 மில்லியன் மற்றும் 6180 ஓக்கீட் விதைகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 744,250 ஆக இந்த ஓக்கீட் கன்றுகளுக்காக மொத்தம் ரூபா 10.53 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஏவ்வாறயினும், 2018 திசெம்பர் மாதம் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 10 வகைகளிலான 1161 ஓக்கீட் கன்றுகள் அழிந்திருந்ததுடன் ரூபா 1.7 மில்லியன் கிரயம் ஏற்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்த 4250 கன்றுகளில் ஒரு பூவேனும் பூத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த ஓக்கீட் கன்றுகள் பராமரித்து பேணிச்செல்வதற்காக தினசரி செலவொன்று ஏற்கப்பட்டிருப்பினும் ஆரோக்கியமான நிலையில் ஓக்கீட் பயிர்சேய்கை பேணிச்செல்வதற்கு முடியாததன் காரணத்தினால் சாத்தியக்கூறு ஆய்வின்றி பயிர்சேய்கைக்காக செலவிடப்பட்டிருந்த பணம் பலனற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின் பின்னர் மற்றும் அத்தியாவசிய தீர்மானத்தின் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் சிறந்த முகாமைத்துவத்துடன் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் மற்றும் முறையான பெறுகை நடைமுறைகளை பின்பற்றாது பல கன்டேனர் பெட்டிகள் சேர்க்கப்பட்டு ஸ்பொட் பார் உணவு விடுதி கட்டுமானத்திற்காக ரூபா 52,890,111 செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு பணம் செலவிடப்பட்டதன் பின்னர் சுற்றியுள்ள குடியிருப்பாளர்களிடமிருந்து எதிர்ப்பு வரக்கூடும் என கருத்து | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | முறையான சாத்தியக்கூறு ஆய்வின் பின்னர் மட்டும் செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

முன்வைக்கப்பட்டு அக் கட்டுமானம் வேறு மாற்று பாவணைகளுக்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது என 2021 செப்தெம்பர் 03 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தது.
எவ்வாறாயினும் 2020 மார்ச் வரையிலும் இது செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன் அதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மரப் பொருட்கள் மழை நீர் கசிவினால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு மாறியமை 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரீசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.2 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.5.1. (அ) உறுப்புரையின் பிரகாரம் கருத்திற் கொள்ளப்படும் பெறுகை விடயத்திற்காக நிதியம் நிதிஏற்பாடு மேற்கொண்டமை தொடர்பில் பரீட்சித்து பார்த்தல் பெறுகை குழுவின் பொறுப்பாகும். அவ்வாறாயினும், ரூபா 1,288.7 மில்லியன் ஆன மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் 48 அறைகளைக் கொண்ட சிறிய சொகுசு ஹோட்டலொன்று நிர்மாணித்தலின் ஒப்பந்தம் நிதியம் பெற்றுக்கொள்ளும் வழி தொடர்பாக குறிப்பாக அடையாளப்படுத்தப்படாதிருக்கையில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், ஒப்பந்த நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களினால் முறையான அதிகாரமின்றி வெளியிடப்பட்டிருந்த கடிதங்களின் பிரகாரம் ஒப்பந்த நிறுவனத்திற்கு 2014 நவம்பர் மாதம் ஒப்பந்தம் வழங்கப்பட்டு கட்டுமானம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணத்தினால் செய்யப்பட்ட வேலைக்கான செலுத்தப்படாத விலைப்பட்டியல் பெறுமதியான ரூபா 179,937,010 மற்றும் அதற்குரிய வட்டியுடன் ரூபா 180,600,000 ஆன வழக்கு கட்டணமொன்று அறவிடப்படுவதற்கு ஒப்பந்த | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | நிதியம் இல்லாது கட்டுமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட கூடாததுடன் கட்டுமான ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் முறையான ஒப்பந்தங்களுக்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நிறுவனத்தினால் வணிக உயர் நீதிமென்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் நிதியம் இல்லாமையின் காரணத்தினால் தொடர்புடைய செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இந்த சட்ட ரீதியான பிரச்சனையின் ஊடாக ஏற்படுகின்ற பாதிப்பு மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலிற்கு உட்செல்லும் நுழைவாயில் அருகில் அமைந்துள்ள 91.02 பர்ச்சஸ் நிலம், **Flora Park Island** என்ற பெயரில் 2019 திசெம்பர் 31 இற்கு ரூபா 68.134 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இதற்காக அபிவிருத்தி செய்வதற்கான முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதன் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி பணிக்காக கிரயம் மதிப்பிடலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகளிலிருந்து வெளியேறும் பொருட்டு மொத்த கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி செய்யும் பணி பகுதியாக வேறுபடுத்தி நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | முறையாக சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டதன் பின்னர் மட்டும் செயற்திட்டத்திற்காக பணம் செலவு செய்யப்படல் வேண்டும். |